

THE MADRAS LEGISLATIVE COUNCIL

Wednesday, the 11th February 1959.

The House met in the Council Chamber, Fort St. George, at three of the clock, Mr. Chairman (THE HON. DR. P. V. CHERIAN) in the Chair.

I.—QUESTIONS AND ANSWERS.

STARRED QUESTION

Committee for the finalization of the Glossary of Tamil equivalents for English administrative terms.

* 21 *Q.*—VIDWAN T. MUTHUKANNAPPAN : Will the Hon. the Chief Minister be pleased to state—

(*a*) the names of the members of the Committee constituted for the finalization of the Glossary of Tamil equivalents for English administrative terms;

(*b*) whether any instances of deviation from the terms found in the Glossary have come to the notice of the Government; and

(*c*) if so, the action taken or proposed to be taken to enforce the use of the terms contained in the Glossary?

THE HON. SRI R. VENKATARAMAN (on behalf of the Hon. the Chief Minister) : (*a*), (*b*) & (*c*) The relevant particulars are given in a statement[a] placed on the table of the House.

VIDWAN T. MUTHUKANNAPPAN : ஐயா, இந்தப் பட்டியலில் கண்ட பெயர்களிலே பாதிப் பேருக்குமேல் அரசாங்க அலுவலர்களாக இருப்பதாகத் தெரிகிறது. மீதி இருக்கிற பல உறுப்பினர்கள் முக்கியமான கூட்டங்களுக்கெல்லாம் வருவதில்லை என்று நான் அறிகிறேன். அவர்களுக்கு ஏதாவது பயணப் படி அல்லது இருக்கைப் படி முதலான படிகள் கொடுக்கப்படாமலிருந்ததுதான் திருநெல்வேலி, பாளையங்கோட்டை போன்ற பகுதிகளிலேயிருந்து வரவேண்டிய உறுப்பினர்கள் வராமலிருந்ததற்குக் காரணமா ?

THE HON. SRI R. VENKATARAMAN : Travelling allowances are being paid.

VIDWAN T. MUTHUKANNAPPAN : ஐயா, இந்த மொழி பெயர்ப்புத் தயார் செய்வதற்குச் சாதாரணமாகத் தமிழ், ஆங்கிலம், மொழி நூல் (Philology) இம்மூன்றிலும் திறமை வாய்ந்தவர்கள் தான் இருக்க வேண்டும். ஆனால், தமிழ் நாட்டிலே அத்தகைய திறமைசாலிகளிலே டாக்டர் சேதுப் பிள்ளை, திரு. மீனாட்சிசுந்தரனார், டாக்டர் மு. வரதராசனார், திரு. ஆறுமுக முதலியார், டாக்டர் சிதம்பரநாதன் போன்றவர்கள் முன்னணியில் இருக்கிறார்கள். ஆனால், இந்தக் குழுவில் டாக்டர் சேதுப் பிள்ளை தவிர, மற்றவர்கள் யாரும் இடம் பெறவில்லை. அவரும் தொடர்ந்து பல நாட்கள் கூட்டத்திற்கு வந்ததாகத் தெரியவில்லை. இந்த ஆட்சித் சொல் அகராதி முற்றும் சரியானதாக இருக்க முடியாது. ஆகையால், திருத்தமான—இறுதியான—ஒன்று தயாரிப்பதற்கு இவர்களையெல்லாம் கொண்ட ஒரு குழு ஏற்படுத்தப்படுமா என்று கேட்கிறேன்.

---

[a] Printed as Appendix I on pages 251-252 infra.

[11th February 1959

THE HON. SRI R. VENKATARAMAN: கனம் அங்கத்தினரிடம் இந்த விதமான நல்ல யோசனை இருந்தால், அதை சர்க்காருக்கு எழுதியனுப்புவதுதான் முறை. அதைச் சட்ட சபையில் கேள்வி மூலமாகக் கேட்பது அவ்வளவு நல்லதல்ல.

VIDWAN T. MUTHUKANNAPPAN: இந்தச் சொற்களிலே பல சொற்கள் அரசாங்கத்தாரால் இப்பொழுது கையாளப்படவில்லை. "கவர்னர்" என்ற சொல்லுக்கு "மாகாணத் தலைவர்" என்று பட்டியலில் இருக்கிறது. ஆனால், "ராஜ்யபாலர்" என்று கையாளப்படுகிறது. "கலெக்டர்" என்ற சொல்லுக்கு "மாவட்ட ஆட்சியாளர்" என்று இருக்கிறது. ஆனால், "தண்டல்நாயகம்" என்று கையாளுகிறார்கள். "டைரக்டர்" என்பதற்கு "இயக்குநர்" என்று இருக்கிறது. ஆனால், "நெறியாளர்" என்று கையாளுகிறார்கள். "இன்ஸ்பெக்டர்" என்பதற்குத் "தணிக்கையாளர்" என்று இருக்கிறது. "ஆய்வாளர்" என்று கையாளுகிறார்கள். இவ்வாறு தப்பிதமான முறையில் கையாளாமல், ஆட்சிச் சொல்லகராதியில் இருக்கின்ற பதங்களை இனியாவது கையாளுவார்களா ?

THE HON. SRI R. VENKATARAMAN: எந்த எந்த அதிகாரி எந்த எந்த இடத்திலே தவறான பதங்களை உபயோகிக்கிறார் என்பதை சர்க்காருக்கு யாராவது சொன்னால்தான் தெரியும். சில இடங்களில் ஏதோ தவறாகச் சில பதங்களை உபயோகிப்பதாக இப்பொழுது கனம் அங்கத்தினர் அவர்கள் சொன்னார்கள். சர்க்கார் பொதுவாக என்ன உத்தரவிட்டிருக்கிறதென்றால், "க்ளாஸரியில்" என்ன பதங்கள் போடப்பட்டிருக்கின்றனவோ, அவற்றையே உபயோகிக்கவேண்டும் என்பது. அதில் ஏதாவது வேறுபாடுகள் இருந்தால், அவற்றை அங்கங்கே உள்ளவர்களுக்கு மீண்டும் எடுத்துச் சொல்லி, "கிளாஸரி"யிலே இருக்கும் பதங்களையே உபயோகிக்கும்படியாக சர்க்கார் உத்தரவிடும்.

Teachers working in the District Board Schools

* 22 Q.—DR. A. CHIDAMBARANATHAN: Will the Hon. the Minister for Finance be pleased to state—

(*a*) whether it is a fact that salaries are paid only once in three months to the teachers working in the Tiruchirappalli District Board Schools and Kanyakumari District Board Schools;

(*b*) whether it is a fact that the salaries for the months of June and July 1958 have not yet been paid to the teachers;

(*c*) if so, the reasons for the delay; and

(*d*) the steps proposed to be taken by the Government to avoid such delays in future?

THE HON. SRI C. SUBRAMANIAM: (*a*) No, Sir. The Member will also kindly note that there is no district board in Kanyakumari district.

(*b*) No, Sir.

(*c*) & (*d*) Do not arise.

DR. A. CHIDAMBARANATHAN: Sir, is it not a fact that in Tiruchirappalli district the payments are long delayed and that the district board did not pay in time the teachers their salaries for May and June?

THE HON. SRI C. SUBRAMANIAM: I know, Sir, that there were some delays not only in Tiruchirappalli district but in some other districts also and this was because the district boards had not